06-06-2013 **அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு**

**தலைப்பு : விளையாட்டில் சூதாட்டமும் போட்டி நிர்ணயமும்**

**தொடக்கவுரையாடல் : க. கோபிகிருஷ்ணா**

*இந்தியன் பிரீமியர் லீக் தொடரில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஸ்பொட் ஃபிக்சிங், சூதாட்டங்கள் காரணமாக அவற்றின் மீதான கவனம் அதிகரித்துள்ளது. கிரிக்கெட்டின் இருப்பையே மீண்டும் கேள்விக்குள்ளாக்கும் வகையில் இந்தக் குற்றச்சாட்டுக்கள், வீரர்கள் மட்டத்தில் மாத்திரமன்றி, நிர்வாக மட்டத்திலும் இக்கேள்விகளை எழுப்பியுள்ளன.*

*3 வகையான சொற்பிரயோகங்கள் இங்கு முக்கியம் பெறுகின்றன.*

1. *போட்டி நிர்ணயம் (Match fixing)*
2. *ஸ்பொட் ஃபிக்சிங் (Spot fixing)*
3. *சூதாட்டம் (Betting)*

*இதில் சூதாட்டத்தையும், போட்டி நிர்ணயத்தையும் குழப்பிப் பயன்படுத்துகின்ற வழக்கம் காணப்படுகின்ற போதிலும், சூதாட்டமென்பது Gambling அல்லது Betting என்பதையே குறித்து நிற்கிறது.*
*ஆகவே, இவை மூன்றிற்குமிடையில் தெளிவான வித்தியாசங்கள் உண்டு.*

*போட்டி நிர்ணயம் அல்லது Match fixing என்பது போட்டியொன்றின் முடிவையே வீரர்கள் பலர் இணைந்து மாற்றுவதாகும். வீரர்கள் ஒன்றிணைந்து தங்கள் அணி தோற்பதை உறுதி செய்வதாக இது அமையும்.*

*ஸ்பொட் ஃபிக்சிங் என்பது போட்டியொன்றின் குறித்த பகுதியொன்றில் வேண்டுமென்றே தங்கள் திறமையை முழுமையாக வெளிப்படுத்தாதாகும்.*
*ஓவரொன்றில் பந்துவீச்சாளர் அதிக ஓட்டங்களை வேண்டுமென்றே விட்டுக் கொடுத்தல், வேண்டுமென்றே No ball (முறையற்ற பந்து) வீசுதல், துடுப்பாட்ட வீரர் வேண்டுமென்றே குறைவான ஓட்டங்களைப் பெறுதல், maiden ஓவர்களை விளையாடுதல் போன்றன இதில் அடங்கும்.*

*சூதாட்டமென்பது மேற்குறிப்பிட்ட இரண்டு வகையான சம்பவங்களுக்கும் அடிப்படையானதாக அமைகிறது.*
*போட்டியின் முடிவு, போட்டியின் சம்பவங்களை வைத்து வெளியார்கள் சூதாடுவதாகும். சூதாட்டம் மூலம் தாங்கள் அதிகளவு பணத்தை ஈட்டிக் கொள்வதற்காக வீரர்களுக்குப் பணங்களை வழங்கி, போட்டி நிர்ணயத்தையும், ஸ்பொட் ஃபிக்சிங்கையும் சூதாடிகள் நடாத்துவார்கள்.*

கிரிக்கெட் ஆட்டக்காரர்கள் ஒவ்வொரு போட்டியிலும் பல லட்ச ரூபாய் சம்பளமாகப் பெறுவதோடு கூடுதலாக விளம்பரங்களில் தோன்றிக் கோடிக் கணக்கில் ஊதியம் பெறுகிறார்கள். இவை மட்டுமின்றி, கிரிக்கெட் சூதாடிகளுடனும் தரகர்களுடனும் கூட்டுச் சேர்ந்து கொள்ளையடித்து உல்லாச வாழ்க்கை நடத்துகிறார்கள். இதில் சுருட்டப்படும் பணம் யாருடையது? இக்கேள்வி பதிலை வேண்டிநிற்கிறது.

*இந்தியா, இலங்கை போன்ற கீழைத்தேய நாடுகளில் கிரிக்கெட் சூதாட்டம் சட்டரீதியற்றது. இங்கிலாந்து, அவுஸ்ரேலியா போன்ற நாடுகளில் சட்டரீதியானது.*
*சட்ட ரீதியாக உள்ள நாடுகளில் குறித்த போட்டியின் முடிவு, யார் அதிக ஓட்டங்களைப் பெறுவார் உட்பட 3, 4 விடயங்களுக்கே சூதாட முடியும்.*
*ஆனால் இந்தியாவில் இயங்கும் சூதாட்டத்தில் ஒவ்வொரு ஓவருக்கும் சூதாட முடியும் என்பதோடு, அண்மையில் இது தொடர்பாக ஆராயும் ஊடகவியலாளர் ஒருவரின் கருத்துப்படி, மைதானத்திற்கு நாய் எப்போது நுழையும், மைதானத்தின் மின் விளக்குகள் இன்று அணையுமா போன்றவற்றிற்கும் கூட சூதாட முடியும். இது தான் பிரச்சினைகளை ஏற்படுத்துகிறது.*

*இதில் போட்டி நிர்ணயமென்பது கடினமானது. அணியில் பல வீரர்களின் ஒத்துழைப்புத் தேவைப்படும். 11 பேரின் ஒத்துழைப்புப் பெறாதுவிடின், யாராவது ஒருவர், இருவரே போட்டியின் முடிவை மாற்றக்கூடும்.*
*ஆகவே அதிக risk இனைக் கொண்டதாக போட்டி நிர்ணயங்கள் காணப்படுகின்றன.*

மிகுதி அடுத்த பக்கம்

**அடுத்து வரும் தலைப்புக்கள்**

**தமிழ் சினிமாவும் அடையாள அரசியலும்**
க. ஆதித்தன் 13-06-2013

**சும்மா இருந்து காசு சம்பாதிக்கும் வழிமுறைகளின் உண்மை முகம்**
வீரசிங்கம் | 20-06-2013



மக்ஸ்வெல்

*ஜேம்ஸ் கிளார்க் மக்ஸ்வெல் (13 ஜூன் 1831 – 5 நவம்பர் 1879) ஸ்காட்டியக் கணிதவியலாளரும், கோட்பாட்டு இயற்பியலாளரும் ஆவார். இவரது முக்கியமான சாதனை மின்காந்தவியல் கோட்பாடு ஆகும்.*

*மின்னியல், காந்தவியல் மற்றும் ஒளியியல் சார்ந்த, ஒன்றுக்கொன்று தொடர்பற்ற முன்னைய கவனிப்புக்கள், சோதனைகள், சமன்பாடுகள் போன்றவற்றை இணைத்து மேற்படி கோட்பாட்டை இவர் உருவாக்கினார். மக்ஸ்வெல்லின் சமன்பாடுகள் என அழைக்கப்படும் இவரது சமன்பாடுகள், மின்சாரம், காந்தப்புலம், ஒளி அனைத்துமே ஒரே தோற்றப்பாட்டின் வெளிப்பாடுகளே என விளக்கின. இதனைத் தொடர்ந்து மேற்படி துறைகளின் முன்னைய விதிகள், சமன்பாடுகள் எல்லாமே மக்ஸ்வெல்லின் சமன்பாடுகளின் எளிமையான வடிவங்கள் ஆயின.*

*மின்காந்தவியலில் மக்ஸ்வெல்லின் பணி இயற்பியலில் இரண்டாவது பெரிய ஒன்றிணைப்பு எனப்படுகின்றது. முதலாவது ஒன்றிணைப்பு நியூட்டனால் செய்யப்பட்டது.*

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 6:00 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
121 , ஹம்டன் லேன்,
வெள்ளவத்தை.
0772260165
0752151580

FB group : facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் : circle.thulaa.net

வலைப்பதிவு : circlelk.blogspot.com

செய்திமடல் - 105 | 13-06-2013

## விளையாட்டில் சூதாட்டமும் போட்டி நிர்ணயமும்

முன்பக்கத் தொடர்ச்சி..

மறுபுறத்தில் ஸ்பொட் ஃபிக்சிங் என்பது மிக இலகுவானதாகக் காணப்படுகிறது.
வீரர்களை தனித்து இந்தக் குற்றத்திற்காக அழைக்க முடியும். பணத்திற்காக ஆசைப்படும் வீரரை அழைத்து, குறித்த ஓவரொன்றில் மாத்திரம் அதிக ஓட்டங்களை விட்டுக் கொடுக்குமாறு கேட்டல் என்பது போட்டி நிர்ணயத்தோடு ஒப்பிடும் போது மிகவும் இலகுவானது.
ஆகவே, இப்போது ஸ்பொட் ஃபிக்சிங் என்பதே சூதாட்டக்காரர்களின் இலகுவான தேர்வாகக் காணப்படுகிறது.

இந்தியன் பிறீமியர் லீக்கின் குற்றங்கள், சர்ச்சைகளைப் பார்ப்பதற்கு முன்னர் அதுபற்றி ஆரம்பத்தை நோக்குதல் அவசியமானது.

2008ம் ஆண்டு பணத்தை முக்கியமான அம்சமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட டுவென்டி டுவென்டி தொடரான இத்தொடரின் உரிமையாளர்களான இந்தியாவின் மாபெரும் முதலாளிகள்.
முகேஷ் அம்பானி, விஜய் மல்லையா, ஸ்ரீனிவாசன், ஷாருக்கான், பிரீத்தி சிந்தா ஆகியோரோடு, GMR Group போன்ற மாபெரும் நிறுவனங்களும் அணிகளைக் கொண்டு காணப்படுகின்றன.

வெளிநாட்டின் பிரபலமான வீரர்களை உள்வாங்கி, மாபெரும் பொலிவூட் துணையுடன் ஆரம்பிக்கப்பட்ட இத்தொடரில், ஒவ்வொரு அணிக்குமான வீரர்களை ஏலத்தின் மூலம் அணியின் முதலாளிகள் தெரிவுசெய்து கொள்வார்கள்.
பெருமளவு விமர்சனங்களைச' சந்தித்திருந்த முறை இது.

இந்தியன் பிறீமியர் லீக் தொடர் எவ்வாறு சூதாட்டங்களுக்கு அதிக வாய்ப்புக்களை ஏற்படுத்துகிறது என்பது முக்கியமானது. டுவென்டி டுவென்டி போட்டிகளில் ஸ்பொட் ஃபிக்சிங்கில் ஈடுபடுவது இலகுவானது. டெஸ்ற் போட்டியொன்றில் துடுப்பாட்ட வீரரொருவர் ஏற்றுக் கொள்ளப்படாத துடுப்பாட்டப் பிரயோகத்தை மேற்கொண்டாலோ, பந்துவீச்சாளரொருவர் அதிகளவு ஓட்டங்களை விட்டுக் கொடுத்தாலோ அது தெளிவாகத் தென்படும். ஆனால் மறுபுறத்தில் டுவென்டி டுவென்டி போட்டிகளில் இது இலகுவானது. துடுப்பாட்ட வீரர்கள் அடித்தாட எதிர்பார்க்கப்படுகிறார்கள், ஆகவே மோசமான துடுப்பாட்டப் பிரயோகங்கள் ஒன்றும் இங்கு புதிதல்ல. அத்தோடு பந்துவீச்சாளர்கள் அதிக ஓட்டங்களை விட்டுக் கொடுப்பதும் புதிதல்ல.

இந்தியன் பிறீமியர் லீக் தொடரில் கிறிக்கெட் நிர்வாகிகளைத் தாண்டி, முதலாளிகள் என்பது முக்கியம் பெறுகிறது. ஆகவே அவர்களது கட்டுப்பாட்டில் முறைகேடுகள் இடம்பெற அதிக வாய்ப்புக்கள் உள்ளன.
தவிர, ஒவ்வொரு போட்டியின் முடிவிலும் களியாட்டக் கொண்டாட்டங்கள் உண்டு. இந்தக் களியாட்ட நிகழ்வுகளில் பணம் படைத்த சூதாடிகள் பங்குகொள்ள முடியுமென்பதோடு, பணத்தாசை கொண்ட வீரர்களை இலகுவாக அழைத்துக் கொள்ளவும் உதவுகிறது.

கிரிக்கெட்டில் வீரர்களின் ஊதியங்களைப் பலமடங்கு உயர்த்தியதாக இந்தியன் பிறீமியர் லீக் தொடரில் ஒப்பந்தமுள்ள வீரர்கள் இவ்வாறான விடயங்களில் ஈடுபட வேண்டும் என்ற கேள்வி எழுகிறது.
ஷாந்தகுமாரன் ஸ்ரீசாந்த்தின் ஐ.பி.எல் இற்கான வருடாந்த ஊதியமாக 400,000 ஐக்கிய அமெரிக்க டொலர்கள் கிடைக்கப் பெறுகின்றன. இவற்றைத் தவிர, ஐ.பி.எல் மூலமாக அனுசரனைகளும், விளம்பர வாய்ப்புக்களும் கிடைக்கப்பெறும். இவற்றையெல்லாம் கொண்டிருந்த ஸ்ரீசாந்த் எதற்காக 72,000 ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்கு அண்மையான தொகைக்கு இந்தக் குற்றத்தை மேற்கொள்ள ஒப்புக் கொண்டார்? அவரது ஒப்பந்தத் தொகையோடு ஒப்பிடும் போது, இந்தக் குற்றத்திற்காக அவர் பெற்ற 72,000 ஐக்கிய அமெரிக்க டொலர்கள் குறைவானவை என்ற போதிலும், அது மிகப்பெரிய பணமே. 6 பந்துகளை சூதாட்டக்காரர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க வீசுவதற்கு 72,000 ஐக்கிய அமெரிக்க டொலர்கள் கிடைக்கப்பெறும். ஒரு பந்திற்கு 12,000 ஐக்கிய அமெரிக்க டொலர்கள்.

ஆக, இங்கே இந்த விடயம் தெளிவாகிறது. ஊதியங்கள் அதிகரிக்கப்பட்டாலும், வசதிகள் அதிகமாக வழங்கப்பட்டாலும், பணத்தை மேலும் அதிகமாக வேண்டி நிற்கின்ற பேராசைக்கார வீரர்கள் தவறுகளில் ஈடுபடத் தான் போகிறார்கள். அதற்கு இந்தியன் பிறீமியர் லீக் போன்ற கட்டமைப்பில் பலவீனமான தொடர்கள் அதிக வாய்ப்புக்களை வழங்கத்தான் போகின்றன.

உலக கிறிக்கெட் சபை முதல் உள்நாட்டு கிறிக்கெட் சபைகளில் அங்கம் பெறவும் தலைமைப்பதவியில் அமர்ந்து கொள்ளவும் பெரும் பெரும் பணமுதலைகள் போட்டியிடுவது ஏதோ நாட்டிற்கும் விளையாட்டிற்கும் சேவை செய்வதற்கல்ல என்பதைப் புரிந்து கொள்ள அதிகம் விவேகம் தேவை இல்லை. இன்று ஏகாதிபத்திய உலகமயமாதலுக்கு ஏற்றவாறு மக்களை மேன்மேலும் கிறிக்கெட்டிற்குள் ஈர்த்து அதன் மீளா அடிமைகளாக்குவதில் பல்தேசிய நிறுவனங்களும் உலக ராட்சத ஊடகங்களும் முன் நிற்கின்றன. இதனை ஒவ்வொரு நாடுகளினதும் முதலாளித்துவ பணம் கறக்கும் நிறுவனங்கள் ஊடகங்கள் மூலமாக மக்கள் மயப்படுத்தும் கைங்கரியத்தில் இறங்கி நிற்கின்றன.

சினிமாவுக்கு அடுத்தபடியாகக் கவர்ச்சிகரமானதாக கிறிக்கெட் மாற்றப் பட்டிருக்கும் அதே சமயம், சினிமாவை விட அதிகமாகப் பணம் புரளும், பணம் கொழிக்கும் மையமாக கிறிக்கெட் விளையாட்டு மாறியிருக்கிறது. கிறிக்கெட் போட்டிகளை நடத்தும் வெவ்வேறு நாடுகளின் ஊழல் மிக்க வாரியங்கள் ஆண்டுக்குப் பல்லாயிரம் கோடி ரூபாய்களைச் சம்பாதிக்கின்றன. கிறிக்கெட் ஆட்டக்காரர்கள் ஒவ்வொரு போட்டியிலும் பல லட்ச ரூபாய் சம்பளமாகப் பெறுவதோடு கூடுதலாக விளம்பரங்களில் தோன்றிக் கோடிக் கணக்கில் ஊதியம் பெறுகிறார்கள். இவை மட்டுமின்றி, கிறிக்கெட் சூதாடிகளுடனும் தரகர்களுடனும் கூட்டுச் சேர்ந்து கொள்ளையடித்து உல்லாச வாழ்க்கை நடத்துகிறார்கள். இதில் சுருட்டப்படும் பணம் யாருடையது? இக்கேள்வி பதிலை வேண்டிநிற்கிறது.




**தமிழ் சினிமாவும் அடையாள அரசியலும்**
**(இந்த வாரம் கலந்துரையாடப்படவுள்ள விடயப்பரப்பு)**

1. சினிமாவும் அரசியலும்
2. மண்வாசனை சினிமாவும் சாதியப் புனைவும்
3. சமூக நீதிக்கு எதிரான அரசியலும் சிறுபான்மையினர் பற்றிய சித்தரிப்பும்
4. சினிமாவில் வன்முறை

சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.
BY NC SA